ஜெயப்ரியா : மொதல் நாளு அப்படி இப்படித்தான் இருக்கும்... ஏய்! நாளேலயிருந்து யாரும் வேற வேலெ வச்சுக்கக் கூடாது...சரியா?

பாரதி : சரி... இப்ப, அந்த ஜீவா காட்சியை மட்டுமாவது பாப்போம்!

*(காட்சி அலுவலமாக மாறுகிறது. ஜீவா கணினியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறாள். மற்றவர்களும் அலுவலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். அவளின் அதிகாரி ஒரு திட்ட அறிக்கையை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைகிறார்.)*

அதிகாரி : ஜீவா!... ஒருவாரம்... நெனச்சா என்னென்னவோ செஞ்சி முடிக்கலாம்... நீ என்ன செஞ்சிருக்கெ பாரு... இஸ் இட் எ ப்ராஜெக்ட்? வில் ஸ்பாயில் தி நேம் ஆஃப் தி கம்பெனி... சாரி ஜீவா!

*(திட்ட அறிக்கையை ஜீவாவின் மேஜையின் மீது எறிந்துவிட்டு அதிகாரி அவரின் அறைக்குள் நுழைகிறார். மற்றவர்கள் ஜீவாவைத் தேற்றுகின்றனர். ஜீவா அழுதுகொண்டிருக்கிறாள். நேரம் ஆக ஆக ஒவ்வொருவராக விடைபெற்றுச் செல்கின்றனர். ஜீவா, மேஜையில் தலைகுனிந்து அழுதுகொண்டிருக்கிறாள். அதிகாரி அறைக் கதவைத் திறந்து வருகிறார். ஜீவாவைப் பார்க்கிறார்.)*

அதிகாரி : ஏய் ஜீவா! என்ன பண்ணிக்கிட்ருக்கெ? ஒய் யு ஃபீல் சோ அப்செட்?... கூல்மா கூல்! லைஃப்னாலே இப்படி அப்படித்தான்... அப்ஸ் அண்ட் டவுண்ஸ்... வீ ஹேவ் டு மேக் இட் ஸ்மூத்... உண்மையெச் சொன்னா ஒம் ப்ராஜெக்ட் நல்லாவே வந்திருக்கு... ஆனா இந்த ஒலகம் எல்லாத்லெயும் லாப நஷ்டக் கணக்கெத்தான் பாக்குது லைஃப்ஸ் டுடேஸ் லாஜிக் இஸ் சிம்ளி யூஸ் அண்ட் த்ரோ அவ்ளவுதான்! நாம அது கூடத்தான் போயாகணும்... ப்ராஜெக்ட்டெ மேலெ ரெக்கமெண்ட் பண்ண நாந்தானே சைன்

பண்ணுறோம்... எனக்கு இது ஒரு பம்பர் ஆஃபர். அதுக்கு நான் ஒண்ணு நம்பர் கேக்கலே. ராயல்டி பிரீயா கொஞ்ச நேரம் எனக்குக் கம்பெனி குடுக்கச் சொல்றேன்...

ஜீவா : சார்... நீங்க பேசுறது சரியில்லை...

அதிகாரி : கூல் ஜீவா கூல்! இட்ஸ் ஆல் இன் தி கேம்!

ஜீவா : எதுடா கேம்?.... நீ என்ட்ட வௌயாடுறதா?

*(பாரதி, அதே வசனத்தை ஆக்ரோஷத்துடன் பேசி, அந்த அதிகாரியைக் கீழே தள்ளுவதைச் செய்து காட்டி, அதை மறுபடியும் செய்து காட்டச் சொல்கிறார்.)*

ஜீவா : ஒனக்கு அக்கா தங்கச்சியே கெடையாதா? பேசி நான் பொண்ணா இருந்ததுனாலெ நீ பேசிட்டே நான் பேயா மார்றதுக்கு முந்தி ஓடுரு. இந்தா உன் ப்ராஜெக்ட்!

*(தூக்கி அதிகாரியின் முகத்தில் எறிந்துவிட்டு வெளியேறுகிறார் ஜீவா.)*

பாடல் : **ரௌத்திரம் பழகு! பெண்ணே நீ ரௌத்திரம் பழகு!**

**பௌத்திரம் காக்க, பெண்ணே நீ ரௌத்திரம்பழகு!**

**கோபப்படு! கோபப்படு! கோபப்படு!**

**சமூகத்தின் சடவுகண்டு கோபப்படு!**

**ஆணுக்குப் பெண் சமம்!**

**இதற்கான ஆக்கினைக்கு நான் குறிக்கக் கோபப்படு!**

**கோபப்படு! கோபப்படு! பெண்ணே நீ கோபப்படு!**

பாரதி : ஏய் ஏய் நிறுத்துங்க... கோபத்தெ... என்ன, ரொம்ப சந்தோஷமாச் சொல்லிக்கிட்டிருக்கீங்க...

லெட்சுமி : கோபத்தையும் சந்தோஷமாச் சொல்லலாந்தானே!

பாரதி : ஆஹா... இதுக்கு அடுத்து வர்ற வரியெல்லாம் கோபமா வருதே!

[illegible] : அக்கா! அதெ அப்புறமாப் பாக்கலாம்... இப்ப சந்தோஷமாப் பாடலாம்..

பாரதி : ம்ம்ம்... சரி, பாப்போம்!

பாடல் : **இந்தக் கோபம் என்பது அறச்சீற்றம்!**

**இதுவும் இல்லையெனில்**

**உனக்குக் கிடைக்கும் ஏமாற்றம்! ஆக, கோபப்படு! கோபப்படு!**

**பெண்ணே நீ கோபப்படு!**

**எதுவும் கூடிவரவில்லையெனில்**

**சாபமிடு! சாபமிடு! சாபமிடு! ஜெகமழியச் சாபமிடு!**

பாரதி : அருமெ! நானே உணர்ச்சி வசப்பட்டுட்டேன்.. சரியாத்தான் இருக்கு. இதோட நிறுத்திக்குவோம்.. இல்லெ நீங்க எனக்குச் சாபம் போட்டாலும் போட்டுருவீங்க... வெள்ளிக் கெழமெ நாடகம்... அன்னைக்கிக் கௌப்பிறனும்... சரி... பாக்கலாம்...

*(எல்லோரும் வெளியேறுகின்றனர்.)*

காட்சி 3 நாடகம்

---

பாரதி : வருகை புரிந்திருக்கும் உங்க எல்லாருக்கும் பாரதியின் இனிய வணக்கம். நாடகம் பார்க்க வந்திருக்றெ உங்க எல்லாரையும் வரவேற்கிறேன். 'ரௌத்திரம் பழகு'ங்ற பேர்ல வீதி நாடகமாத்தான் ஒத்திகை பாத்துகிட்ருந்தோம். திடீர்னு எங்களுக்கு ஒரு யோசனை!.... நமக்கான தொன்மத்லெயிருந்து ஒரு கருவை எடுத்து, அதை நாடகமாப் போட்டா எப்படின்னு தோணுச்சிது. தொன்மக் கருத்தை அதில் சொல்லலாம்னு பார்த்தப்ப, 'ரௌத்திரம் பழகு'ங்றது, 'பெண் அம்போவான அம்பாவின் கதை'யா

ஆமிருமி! நாடகத்தைப் பாருங்க. ஒங்கக் கருத்தைச் சொல்லுங்க.

கட்டியக்காரன்: வந்தான் இதென்ன பாருங்க கட்டியக்காரன்
வாரான் இதென்ன பாருங்க கட்டியக்காரன்
அம்பாவின் கதையைச் சொல்லத்தான் நாடக
அடிபோட்டு வாரேன் இங்கேதான்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

பார்வையாளர்கள் அனைவருக்கும் வணக்கம். 'விடியல்' குழுவினர் சார்பாக இன்று 'சொந்தப் பழுத்' என்கிற நாடகத்தை உங்கள் முன் நிகழ்த்த இருக்கிறோம். இதிலிருக்கிற சொற்குற்றம், பொருட் குற்றம், மேளக்குற்றம், தாளக் குற்றம் ஆகியவைகளைப் பொறுத்து, தாங்கள் பெற்ற பிள்ளைகள் தவறு செய்தால் எப்படிப் பொறுத்தருள்வீர்களோ அது போல் எங்களை ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

முந்தி முதலாக, காசிராஜ மகாராஜா சபைக்கு வருகின்ற விதம் காண்க!

காசிராஜன்: ராஜ மகாராஜன் நான் வந்தேன்
ராஜாதி ராஜன் காசிமா நகரினையே
காவல் செய்யும் காசி மகாராஜன் நான் வந்தேன்
காசி மகாராஜன் நான் வந்தேன்
வந்து சபைக்கு வந்தனங்கள் நான் தந்தேன் தந்தேன்
அடி காவலா!

காவலன்: மகாராஜா!

காசிராஜன்: எனக்குண்டு அழகிய புத்திரிகள். அவர்களுடைய பெயர்கள் என்ன தெரியுமா. அம்பா, அம்பிகா, அம்பாலிகா. அவர்கள் மூவருக்கும் மணம் முடிக்கும் காலம் வந்ததால், விவாகம் செய்து வைக்க வேண்டும்.

பெரும்பொறுப்பு பெற்றவனான எனக்கு இருக்கிறபடியால், அவர்களுக்குச் சுயம்வரம் நடத்த வேண்டி, அவனி 56 தேசத்து அரசர்களையும் வரச்சொல்லி, அவர்களுக்கெல்லாம் அறிவிக்கை அனுப்பியிருந்தேனே... அவர்களெல்லாம் வந்துவிட்டார்களா?

காவலன் : வந்துட்டாங்க மகாராசா. ஆனா அந்த அஸ்தினாபுரத்து நாற்காலி மட்டும் காலியாக் கெடக்கு மகாராசா! இன்னொன்னு, வந்திருக்ற எல்லா தேசத்து ராஜாக்களும் இன்னைக்கித்தான் அழுக்கு தேச்சிக் குளிச்சிருப்பாங்க போலயிருக்கு... பக்கத்லெ போனா ஒரே சீயக்கா வாடை! ஒங்க ஒடம்புலெயும் அதே வாடைதான் மகராஜா!

காசிராஜன்: இருக்கட்டும். ஆனால் என்னுடைய அன்பு மகள் அம்பா, சௌபால தேசத்து ராஜாவான சால்வாமீது பிரீதி மிகக் கொண்டிருப்பதாய்ச் சொன்னாளே! அந்தச் சௌபால தேசத்து ராஜா சால்வா வந்திருக்கிறாரா?

காவலன் : முன்வாசக் கதவெத் தெறந்ததும், அவர் தான் மகாராஜா மொதல்ல வந்து, உள்ளெ ஒக்காந்தாரு!

காசிராஜன்: சரி... அப்படியானால் என்னுடைய அருமந்த புத்திரிகளைச் சுயம்வர மண்டபத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள்!

காவலன் : சரி, மகாராஜா!

*(மூன்று பெண்களும் ஒவ்வொருவராக அழைத்து வரப்படுகின்றனர்.)*

காசிராஜன்: என்னுடைய அழைப்பை ஏற்று சுயம்வரத்திற்கு வந்திருக்கிற எல்லா தேசத்து அரசர்களுக்கும், காசி மாநகரைப் பரிபாலனம் செய்துவரும் காசிராஜனாகிய நான் வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில், என்னுடைய மூத்தமகள் அம்பா, தனக்குரிய மணாளனைத் தானே தேர்ந்தெடுப்பாள். *(அழைப்பு மணியை அடிக்கிறார்)* நடக்கட்டும் சுயம்வரம்!

*(அம்பா மாலையை எடுத்துக்கொண்டு வருகிறா... அப்பொழுது கர்ஜிக்கும் குரலில்)*

பீஷ்மர் : நிறுத்துங்கள் சுயம்வரத்தை!

காசிராஜன்: பீஷ்மரே... எதற்காக? பிரம்மச்சாரியான நீர், இந்த சுயம்வரத்திற்கு வரவேண்டிய அவசியம் என்ன வந்தது?

பீஷ்மர் : என்னுடைய தம்பி விசித்திர வீரியனுக்காக, இந்த மூன்று கன்னியரையும் பலவந்தமாகத் தூக்கிச் செல்லப் போகிறேன். என்னைத் தடுக்கும் ஆற்றலுள்ள ஆண்மகன் எவனாவது இருந்தால், என்னை வென்று அந்தக் கன்னியரைக் கூட்டிச் செல்லட்டும்.

காசிராஜன்: பீஷ்மரே! என்ன இது விபரீதம்! உங்களை வெல்ல யாரிருக்கிறார்கள் இங்கே?

சால்வா : நானிருக்கிறேன். கண்ணோடு கண்நோக்கிக் காதலை என் உள்ளத்தில் விதைத்த அம்பாவை அடைவதற்காக இந்தச் சவாலை நான் எதிர்கொள்கிறேன்.

அம்பா : அய்யா, இது என் சுயம்வரம்! நான் விவாகம் செய்ய விரும்புகிற மணவாளரைத் தேர்ந்தெடுக்கிற உரிமை இந்தச் சுயம்வரத்தில் எனக்கு மட்டுமே உண்டு.

பீஷ்மர் : பெண்ணே! நீ சிறுகுழந்தை. நம்முடைய மண உரிமை முறைகளை நீ அறிந்திருக்க மாட்டாய். நம்முடைய மறைநூல்கள் சொல்லியிருக்கிற எண் வகை விவாக முறைகளில் பலவந்தமாகத் தூக்கிச் சென்று மணமுடிக்கிற இது, ராக்கதர் முறை. காசி மகராஜனே, என்ன சொல்கிறீர்?

*(காசி மகராஜா தலைகுனிந்து அமர்தல். அங்கு சண்டையிடும் களமாகிறது.)*

பாடல் : அண்ட கண்டமும் கிடுகிடுங்க
ஆட்படை தேர்ப்படை நடுநடுங்க
மோதல் நடந்தது. பீஷ்மர் சால்வா மோதல் நடந்தது

காசிராஜனும் தலைகுனிய... அம்பையும் அங்கே பதைபதைக்க.

பீஷ்மர் சால்வா மோதல் நடந்தது... பீஷ்மர் சால்வா மோதல் நடந்தது...

*(பீஷ்மருடன் சால்வா சண்டையிடுதல். சால்வா தோற்றுக் கீழே விழுதல். அம்பா, பீஷ்மரைத் தடுத்து, அவரின் காலில் விழுந்து முந்தானைப் பிச்சை கேட்கிறார்.)*

அம்பா : பிதாமகரே!... என்னை மன்னியுங்கள். ஏற்கெனவே நானும் இவரும் மனதால் இணைந்துவிட்டோம். நீங்கள் மனமிரங்கி எங்கள் இருவரையும் சேர்த்து வைக்க உதவ வேண்டும்.

பீஷ்மர் : பெண்ணே! உன் உள்ள உறுதியைக் கண்டு மகிழ்கிறேன். சால்வாவை மணாளனாக உள்ளத்தில் வரித்துக்கொண்ட உன்னால், என் தம்பி விசித்திர வீரியன் ஒருக்காலும் மகிழ்ச்சி பெறமுடியாது. உன் தங்கைகள் இருவரும் என்னோடு வரட்டும்... நீ உன் விருப்பப்படி சால்வாவை மணம் முடித்து மகிழ்ச்சியாக வாழ்!

அம்பா : பிதாமகரே!.... என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லையே.... இதென்ன... கனவா... நனவா... என் வாழ்நாளில் உங்களை என்றும் மறக்க மாட்டேன்!

பீஷ்மர் : நல்லது அம்பா! இன்னொரு வாழ்நாளிலும் கூட, என்னை நீ மறக்கவே மாட்டாய்!...

அம்பா : இன்னொரு வாழ்நாளா?... என்ன சொல்கிறீர்கள்?

பீஷ்மர் : ஏழேழு ஜென்மத்திற்கும் என்கிறேன். சரி, அதிருக் கட்டும் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ உன்னை ஆசீர்வதிக்கிறேன்... சால்வா! உனக்குரிய பொருளை நீயே எடுத்துச்செல்!

*(சால்வா அதிர்ச்சியடைந்து பார்த்துக் கொண்டிருத்தல். அம்பா எழுந்து வந்து மகிழ்வுடன் சால்வாவை*

எழுப்பத் தன் கையைத் தருகிறாள். சால்வா அவ... நிராகரிக்கிறான். அம்பா அதிர்ச்சி அடைகிறாள்.

அம்பா : என் மனதிற்குகந்த மணாளரே!... உங்களுக்கு என்னானது? உங்களுக்காக பீஷ்மரிடம் நா... முந்தானைப் பிச்சைக் கேட்டது தவறா?

சால்வா : உன் விருப்பத்தைத் தவறென்று சொல்ல நான் யா... ஆனால் நான் சத்திரியன்... சண்டையில் வெற்... பெற்றிருந்தால் மட்டுமே உன்னைக் கைபிடிக்கு... உரிமை எனக்குண்டு. தோற்றுப் போன பொருளை... பிச்சையாகப் பெற்றுக்கொள்ளும் மனத்திடம் எனக்கில்லை. என்னை மன்னித்துவிடு!

அம்பா : நீலவிதானத்து நித்திலப் பந்தலின் கீழ், கோலமயிலே, கொஞ்சும் கிளியே, கோமேதகமே என்றெல்லாம் என்னைப் பாராட்டி, என் கையைப் பிடித்த நீங்கள் சொல்கிறீர்கள், என் கைபிடிக்கும் உரிமையை இழந்துவிட்டேன் என்று!

சால்வா : தோற்றவள்...பேசுவதற்கான உரிமையை இழந்தவள். இனி நீ பீஷ்மரின் பொருள்! அதைப் பிச்சையாகப் பெற்றுக் கொள்வது சத்திரிய தர்மம் அல்ல.

அம்பா : நான் பொருளா... உங்களின் உயிரில்லையா?

சால்வா : ஓர் அடிமை, இன்னொரு அடிமையை நேசிக்கவே முடியாது... என்னை மன்னித்துவிடு!

அம்பா : பிதாமகரே! பார்த்தீர்கள்தானே நீங்களும்! எனக்கொரு வழியைச் சொல்லுங்கள்!

பீஷ்மர் : நானா... நான் பிரமச்சாரி... உன்னை மணந்து கொள்ள என்னால் முடியாது. இன்னும் கொஞ்ச நேரம் உன்னுடன் பேசிக்கொண்டிருந்தால் அது என் பிரமச்சரியத்திற்கு இழுக்காகிவிடும்.. என்னையும் மன்னித்துவிடு!

அம்பா : அப்பா..என்னப்பா இது விசித்திரம்? இந்தச் சுயம் வரத்தில் என் விருப்பம் எங்கேயப்பா இருக்கிறது?

காசிராஜன்: பெண்ணாய்ப் பிறந்ததன் சாபம் இது! என்னையும் கூட நீ மன்னித்து விடு!

அம்பா : மன்னித்து விடு... என்னையும் மன்னித்து விடு... என்னையும்கூட மன்னித்துவிடு!

மறுபடியாக என்னை மதிக்காத உங்களைப்போலவா மன்னிக்க மட்டும் இந்த அடிமைக்கு உரிமையைக் கொடுத்திருக்கிறீர்களா?... இதையெல்லாம் கேள்வி கேட்கும் ஒரு காலம் நிச்சயம் வரும்... அப்பொழுது அவர்கள் உங்களைக் கூண்டிலேற்றுவார்கள்... சுயம்வரம் பெண்ணிற்கான சுதந்திரம் என்பதாக எண்ணி இருந்தேன். ஆணாதிக்கச் சமூகத்தில் அது அவர்களின் பராக்கிரமத்திற்கான அடையாளம் என்பதாக மாற்றிவிட்டார்கள்... என்னுடைய வாழ்வை என்னால் தீர்மானிக்க முடியவில்லை. மூன்று ஆடவர்களின் கைவிரிப்பில்தான் அது சிக்கிக் கொண்டிருக்கிறது... இன்று நான் ஏமாந்து போயிருக்கலாம். மீண்டும் இன்னொரு பூகம்பமாய் நான் திரும்பி வருவேன்...

*(ரௌத்திரம் கொழுந்துவிட்டு எரிய, ரௌத்திர தாண்டவம் ஆடுகிறாள் அம்பா!)*

பெற்ற பெண்ணை 'அம்போ' என விட்டுவிட்ட உங்கள் உறையில் எதற்கு இந்த வாள்!... காதலித்த வளை 'அம்போ' எனக் கைவிட்ட அடிமைக்கு அழகு செய்யவா இந்த உறைவாள்!... பிதாமகரே! பெண்களின் வாழ்வைக் கூறு போடவா உங்களிடம் இந்த உடைவாள்!......

*(மூன்று வாட்களையும் அம்பா கையிலேந்தி ஆவேசமாக ஆடுகிறாள். அதன் முடிவில் மூன்று வாட்களையும் ஒருசேரக் கையிலேந்தி, தன் உடலில் குத்திச் சரிகிறாள்.)*

இழந்த இந்தக் கணக்கை நேர்செய்ய நான் மீண்...
வருவேன்... மீண்டும் வருவேன்...

*(அலறிச் சரிந்து நிலத்தில் விழுகிறாள். ஆ... மூவரும், குற்றவாளிகளாய் மூன்று பக்கமாய் தலைகுனிந்து நிற்கின்றனர். அவர்களின் ... கட்டியக்காரன் வருகிறான்.)*

**கட்டியக் காரன்** : நடிகர்களுக்கெல்லாம் இல்லாத சுதந்திரம், நாடகத்தி... கட்டியக்காரனுக்கு இருக்கு... நான் சொல்றேன்... இது மாதிரி ஆம்பளைங்களா நீங்க இருக்காதீங்க... எதையும் கேள்வி கேக்குற மனுஷங்களா நீங்க... இருக்கணும். 'எவருடைய கருத்தையும் மறுப்பதற்... எவருக்கும் உரிமை உண்டு; அதைவெளியிட... கூடாது என்று சொல்கிற உரிமை எவருக்கு... இல்லை'ன்னு சொன்ன பெரியார், பெண்ணிய... பத்தி 1930கள்லேயே சொல்லி யிருக்றதெ இப்ப... படிச்சாலும் புதுசாத்தான் இருக்குது... நீங்களு... அதைக் கொஞ்சம் கேளுங்க...

**நபர் 1** : 'எந்த நிர்ப்பந்தமானாலும், எந்தக் கட்டு... பாடானாலும், எந்தத் தருமமானாலும் ஆணுக்கு... பெண்ணுக்கும் இருவருக்கும் சமமாக இருப்பதானா... அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை... அப்படி... கில்லாமல், எவரொருவர் ஆதிக்கத்தையு... வலியுறுத்துகிற எதனோடும் நமக்குச் சம்மதமில்லை... அதனால் நமக்குப் பலனில்லை.

**நபர் 2** : இந்துமத சாஸ்திரம், தர்மம், புராண இதிகாசம், நீ... கதைகள் எனும் அழுக்கு மூட்டைகளைச் சுமந்... கொண்டு யார் எங்கு போய்ப் பெண்கள் சுதந்தி... பேசினாலும், அது கட்டுப்பாடுள்ள ஆணடிமை... பிரகாரமாகத்தான் முடியுமே தவிர, அது நிரந்... விடுதலையை உண்டாக்காது.

**நபர் 3** : பெண்களைப் படிக்க வைக்க வேண்டுமென... சொல்லி, எழுத்து வாசனையுண்டாக்கி, அவர்க...